# புதிய ஏற்பாட்டில் பழைய பிரமாணம்

ஓவன் டி. ஆல்பிரைட்

*இவரோ விசேஷித்த வாக்குத்தத்தங்களின்பேரில் ஸ்தாபிக்கப்பட்ட விசேஷித்த உடன்படிக்கைக்கு எப்படி மத்தியஸ்தராயிருக்கிறாரோ, அப்படியே முக்கியமான ஆசாரிய ஊழியத்தையும் பெற்றிருக்கிறார். அந்த முதலாம் உடன்படிக்கை பிழையில்லாதிருந்ததானால், இரண்டாம் உடன்படிக்கைக்கு இடம் தேட வேண்டுவதில்லையே. அவர்களைக் குற்றப்படுத்தி, அவர்களை நோக்கி: இதோ, கர்த்தர் சொல்லுகிறதென்னவெனில்: இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் நான் புது உடன்படிக்கையை ஏற்படுத்துங்காலம் வருகிறது. அவர்களுடைய பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து கொண்டுவரும்படிக்கு நான் அவர்களுடைய கையைப் பிடித்த நாளிலே அவர்களோடு பண்ணின உடன்படிக்கையைப்போல இது இருப்பதில்லை (எபி. 8:6-9அ).*

பழைய மற்றும் புதிய உடன்படிக்கைகளான மோசேயின் பிரமாணமும் கிறிஸ்துவின் பிரமாணமும் ஆகிய இரண்டும் இன்றைய நாட்களில் அமலில் இருக்க முடியுமா? பலர், பழைய உடன்படிக்கை என்ற வகையில் “தேவனுடைய பிரமாணம்” இன்னமும் அமலில் இருப்பதாகவும், ஆனால் “மோசேயின் பிரமாணமானது” (ஆணைகள், குடிமைச் சட்டங்கள், பலி செலுத்தும் முறைமைகள் மற்றும் ‘‘தேவனுடைய பிரமாணத்தில்’’ உட்படுத்தப்பட்டிராத மற்ற எந்த விதிகள் ஆகியவை) இப்பொழுது அமலில் இருப்பதில்லை என்பதாகவும் போதிக்கின்றனர். இந்தக் குழுவினர், இஸ்ரவேலர்களுக்குக் கொடுக்கப்பட்ட விருத்தசேதனம், ஒழுக்க விதிகள், மற்றும் உணவு விதிகள் போன்ற சில பிரமாணங்களை ஏற்றுக்கொள்ளுகின்றனர், ஆனால் மற்ற கட்டளைகளைப் புறக்கணிக்கின்றனர்.

நாம் தேவனுடைய போதனைகளைத் தக்க விதத்தில் கையாள வேண்டும். “நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு” (2 தீமோ. 2:15).

## இயேசுவும் நியாயப்பிரமாணமும்

நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசனங்களிலும் காணப்படும் கட்டளைகள் இன்னமும் அமலில் உள்ளனவா? இயேசுவின் கூற்று ஒன்று

*இவைகள் யாவும் பூமி நிலைநிற்கும் வரைக்கும் தொடர்ந்து அமலில் இருக்கும் என்று போதிக்கும்படிப் பொருள் கொள்ளப்படுகின்றது. "நியாயப்பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல நிறைவேற்றுகிறதற்கே வந்தேன். வானமும், பூமியும் ஒழிந்துபோனாலும், நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறு மளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்துபோகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத். 5:17, 18).*

*இவ்வசனப் பகுதியானது பல முக்கிய உட்கண்ணோட்டங்களை அளிக்கின்றது: (1) இயேசுவின் வருகையானது நியாயப்பிரமாணங் களையோ அல்லது தீர்க்கதரிசனங்களை அழிப்பது என்ற நோக்கம் கொண்டிருந்ததில்லை. (2) மாறாக அவைகளை நிறைவேற்றுவதற்காகவே அவர் வந்தார். (3) இயேசு நியாயப்பிரமாணத்தைப் பற்றி மட்டுமின்றி தீர்க்கதரிசிகளின் வசனங்களைப் பற்றியும் பேசினார். (4) தேவனால் கொடுக்கப்பட்ட தீர்க்கதரிசனங்கள் யாவும் நிறைவேறுமளவும் வானமும் பூமியும் ஒழிந்து போக முடியாது. (5) இயேசு தம்மைக் குறித்துச் சொல்லப்பட்ட ஒவ்வொரு தீர்க்கதரிசனமும் நிறைவேறும் என்ற நிச்சயத்தை உறுதிப்படுத்தினார். (6) தீர்க்கதரிசனங்கள் நிறைவேற்றப்படும் பொழுது அவைகள் ஒழிந்துபோகின்றன (அதாவது, இனியும் அவைகள் நிறைவேற்றப்பட வேண்டிய அவசியமும் இல்லை).*

*இயேசு, (1) வானமும் பூமியும் ஒழிந்து போகும் வரையிலும் நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களும் நிலைநிற்க வேண்டும் என்றோ அல்லது (2) அவைகளுக்கு முழு அர்த்தத்தைக் கொடுப்பதற்காகத் தாம் வந்ததாகவோ (இந்தக் கருத்தானது சில மொழிபெயர்ப்புகளில் முன் வைக்கப்பட்டுள்ளது[1]) கூறவில்லை.*

*இயேசுவின் கூற்றுக்களில் இதே வகையான கட்டமைப்புள்ள மற்ற வசனங்களைக் கவனியுங்கள்:*

> *அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன் (மத். 5:17ஆ).*
>
> *நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன் (மத். 9:13ஆ).*
>
> *சமாதானத்தையல்ல, பட்டயத்தையே அனுப்பவந்தேன் (மத். 10:34ஆ).*
>
> *நான் உலகத்தை நியாயந்தீர்க்கவராமல், உலகத்தை இரட்சிக்க வந்தேன் (யோவா. 12:47ஆ).*

*இயேசு சமாதானத்தை (யோவா. 14:27) கொண்டு வரவும் மற்றும் நியாயந்தீர்க்கவும் (யோவா. 5:22) நீதிமான்கள் மற்றும் பாவிகளாக உள்ள எல்லா மக்களையும் அழைக்கவே வந்தார் (மத். 28:19). இந்த வசனங்களில்*

ஏதேனும் முரண்பாடு இருக்கின்றனவா? இல்லை, இல்லவே இல்லை. இந்தக் கூற்றுக்கள், கிரேக்க வார்த்தைக் கட்டமைப்பில் " 'ஆ'வைப் போல் அவ்வளவு அதிகமான 'அ'வை அல்ல'' என்று அர்த்தப்படும் வாக்கிய அமைப்பைப் பயன்படுத்துகின்றன, இவை "அ"வை அல்ல ஆனால் "ஆ"வை மட்டுமே என்று கூறவில்லை. இவ்வசனப் பகுதிகளில் உள்ள கிரேக்க மரபுச் சொற்றொடரைக் கொண்டு வருவதற்காக ஒவ்வொரு கூற்றின் ''அ'' பிரிவிலும் "மட்டும்" அல்லது "வெறும்" என்பது உள்ளடக்கப்பட முடியும்: "நீதிமான்களை மட்டுமல்ல, ஆனால் பாவிகளையும்"; "சமாதானத்தை மட்டும் கொண்டு வருவதற்கல்ல, ஆனால் பட்டயத்தையும்"; "உலகத்தை நியாயந்தீர்க்க மட்டுமல்ல, ஆனால் அதை இரட்சிக்கவும்"; மற்றும் "நியாயப் பிரமாணத்தை அழிக்கிறதற்கு மட்டுமல்ல, அதை நிறைவேற்றுகிறதற்கும்."

பின்வரும் விளக்கத்தைக் கவனியுங்கள்: ஒருவர் ஒரு கடையில் பல பொருட்களை வாங்குகின்றார். அவர் அவைகளை வாங்கும் பொழுது அவற்றிற்கு விலை செலுத்தவில்லை, ஆனால் தாம் பிற்பாடு அதற்கு விலை செலுத்தும்படியான ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுகின்றார். இரண்டு வாரங்களுக்குப் பின்பு, பொருள்களை வாங்கியவர் கடைக்குச் சென்று முதலாளியிடம் மறு உறுதியளிக்கின்றார். "இந்த வரவுச் சீட்டை ஒழித்துப் போட நான் வந்துள்ளேன் என்று நீங்கள் எண்ண வேண்டாம்; அதை ஒழிப்பதற்கல்ல, நிறைவேற்றுவதற்கே வந்தேன். அந்தச் சீட்டில் உள்ள ஒவ்வொரு பைசாவும் என்னால் செலுத்தித் தீர்க்கப்படுமுன் இவ்வருடம் முடிவடையாது" என்கின்றார்.

இந்தச் சூழ்நிலைக்குச் சில குறிப்பிட்ட உண்மைகள் உறுதியானவை களாய் இருக்கும்: (1) வாடிக்கையாளர் அந்தப் பொருட்களுக்கு பணம் செலுத்தத் திட்டமிட்டார். (2) அவர் அவ்வாண்டு முடிவதற்கு முன்பாக அதைச் செலுத்தி விடுவார்; உண்மையில், அடுத்த வாரமே கூட செலுத்தி விடுவார். (3) பணம் செலுத்தப்பட்டு விட்டால், அந்தக் காகிதங்கள், பொருள்களை வாங்கிப் பின்பு பணம் செலுத்தியிருந்ததற்கான பதிவேடாய் இருக்குமேயன்றி, அதன் பிறகு அந்த ஒப்பந்தமானது அமலில் இருக்காது. கடைசியாக, (4) அந்தச் சீட்டுக்குப் பணம் செலுத்தப்பட்ட பொழுது, அது இனியும் அமலில் இருக்காது. (மீண்டும் மீண்டும் பணம் செலுத்த வேண்டிய அவசியம் இருக்காது.)

இதுவே, நியாயப்பிரமாணம் மற்றும் தீர்க்கதரிசனங்கள் ஆகியவற்றிற் கும் உண்மை நிலையாக உள்ளது. இயேசு அவைகளை ஒழித்துப் போட மட்டுமின்றி, நிறைவேற்றவும் வந்தார். அவைகளை ஒழித்துப் போடுவதற்கு அவர் வந்திருந்தாரென்றால், அவைகளை நிறைவேற்ற வேண்டிய அவசியம் அவருக்கு இருந்திராது. நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசனத்திலும் உள்ள எல்லாவற்றையும் செய்வதன் மூலம் அவர் அவைகளை நிறை வேற்றினார். அவர் அவைகளை நிறைவேற்றிய பொழுது அவைகள் ஒழிந்து போயின. அவைகள் நிறைவேற்றப்பட்ட பிறகு ஒழிந்து போகாதிருந்தன என்றால், அவர் மீண்டும் மீண்டும் மரித்து உயிர்த்தெழு வேண்டியது அவசியமாய் இருக்கும். அவர் இவைகளை ஒரே தரமாக நிறைவேற்றி விட்டதால், இது அவசியமற்றதாக உள்ளது (லூக். 24:44; 1 கொரி. 15:3, 4;

*எபி. 10:11, 12).*

*"நிறைவேற்ற" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள pleroo என்ற கிரேக்க வார்த்தையானது ''முழுமையாக்க, தீர்க்கதரிசி கூறியதைச் செய்ய, தீர்க்கதரிசனத்தை நிறைவேற்ற" (மத். 1:22; 2:15, 17, 23); "தேவைப்பட்டதை முழுமையாக்க அல்லது முடித்து வைக்க" (மத். 3:15; மாற். 1:15; லூக். 7:1); ''முழுமையை நிறைவு செய்ய'' (மத். 13:48; 23:32; லூக். 3:5) என்று அர்த்தப்படுகின்றது. Pleroo என்பது பயன்படுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பப் பொருள் வேறெதுவும் மத்தேயு 5:17ன் மொழிபெயர்ப்பை இயேசு நியாயப்பிரமாணம் மற்றும் தீர்க்கதரிசனம் ஆகியவற்றிற்கு அவைகளின் முழு அர்த்தத்தைக் கொடுக்க வந்தார் என்று கூறுவதாக நியாயப்படுத்த முடியாது. இந்த வசனப் பகுதியில் இயேசு தாம் நிறைவேற்ற வந்த தீர்க்கதரிசனம் மற்றும் முன் நிழலாட்டம் ஆகியவை பற்றிப் பேசினார்.*

*இவ்வசனப் பகுதியானது நியாயப்பிரமாணம் ஒழிக்கப்படாது என்று அர்த்தப்படுத்தும் வகையில் விளக்கம் அளிக்கப்பட்டால், நாம் இயேசுவுக்கும் புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களுக்கும் இடையில் மோசமான முரண்பாடு ஒன்றை கொண்டவர்களாகி விடுவோம். நியாயப் பிரமாணமும் இஸ்ரவேலருடன் தேவன் ஏற்படுத்தியிருந்த உடன்படிக்கை யும் புறம்பே ஒதுக்கப்பட்டன என்று பல வசனப் பகுதிகள் உறுதிப் படுத்துகின்றன. மேலும், நியாயப்பிரமாணத்தில் ஒரு மாற்றம் ஏற்படும் என்று இயேசுவே சுட்டிக்காட்டினார்.*

> *அதற்கு அவர்: நீங்களும் இவ்வளவு உணர்வில்லாதவர்களா? புறம்பேயிருந்து மனுஷனுக்குள்ளே போகிறதொன்றும் அவனைத் தீட்டுப்படுத்தமாட்டாதென்று நீங்கள் அறிந்து கொள்ளவில்லையா? அது அவன் இருதயத்தில் போகாமல் வயிற்றிலே போகிறது; அதிலிருந்து எல்லாப் போஜனங்களின் அசுத்தங்களையும் கழிக்கிற ஆசனவழியாய் நீங்கிப் போகும்? (இவ்விதமாக அவர் எல்லா உணவுகளும் சுத்தமானவையே என்று அறிவித்தார்.) (மாற். 7:18, 19).*

*நியாயப்பிரமாணமானது சுத்தமான மற்றும் அசுத்தமான உணவுகளுக் கிடையே (உள்ள வேறுபாட்டை) விளக்கிக் கூறியது. ஆகையால், இயேசு உணவு விதிகளை மாற்றிக் கொண்டிருந்தார் (1 தீமோ. 4:3-5ஐயும் காணவும்).*

*ஆராதனை செய்யும் இடம் பற்றிய கட்டளையும் மாற்றப்படும் என்று இயேசு சுட்டிக்காட்டினார். யோவான் 4:21ல் நாம், "அதற்கு இயேசு: ஸ்திரீயே, நான் சொல்லுகிறதை நம்பு, நீங்கள் இந்த மலையிலும், எருசலேமிலும் மாத்திரமல்ல, எங்கும் பிதாவைத் தொழுதுகொள்ளுங் காலம் வருகிறது" என்றார், என வாசிக்கின்றோம். நியாயப்பிரமாணத்தின் படி, தேவன் தெரிந்துகொள்ளும் நகரத்தில் (உபா. 12:5, 11, 14, 18) அதாவது எருசலேமில் (1 இரா. 11:13; அப். 8:27) யூதர்கள் ஆராதிக்க வேண்டி யிருந்தது. இந்த ஆணை மாற்றப்படும் என்று இயேசு போதித்தார்.*

## பவுலும் நியாயப்பிரமாணமும்

புறஜாதியார் விருத்தசேதனம் பெறுவதும், மோசேயின் பிரமாணங்களைக் கைக்கொள்வதும் அவசியம் என்று பரிசேயர்கள் கூறியது சரியா என்பதைத் தீர்மானம் செய்யப் பவுலும் பர்னபாவும் எருசலேமில் அப்போஸ்தலர்களையும் மூப்பர்களையும் சந்தித்தனர் (அப். 15:5ஆ). இவ்வாதத்தைப் பற்றி இந்த நடத்துனர்கள் புறஜாதியாருக்கு அனுப்பப்பட்ட கடிதமானது அவர்களால் "கட்டளை பெறாத" (அப். 15:24) என்று இதன் இயல்பைப் பற்றி எடுத்துரைத்தது. புறஜாதியாருக்கு வரையறைக்குட்பட்ட கட்டுப்பாடுகளே தரப்பட்டது (அப். 15:29), ஆனால் அக்கடிதமானது, புறஜாதியார்மேல் நியாயப் பிரமாணத்தைத் திணிக்கக் கூடாதென்று தெளிவாகக் காண்பித்தது.

பழைய ஏற்பாட்டின் கட்டளைகளைக் குறித்துப் புதிய ஏற்பாட்டில் "நியாயப்பிரமாணம்" என்று குறிப்பிடப்பட்டது, தேவன் இஸ்ரவேலர்களுக்குக் கொடுத்த பிரமாணமாகவே உள்ளது. யூதர்கள் மோசே கூறியவற்றை மீறியபோது அவர்கள் தேவனுடைய கட்டளைகளையும் அவருடைய வசனங்களையும் புறம்பே தள்ளியதாக இயேசு எடுத்துரைத்தார் (மாற். 7:8-13). மோசேயின் பிரமாணத்தில் இருந்தது கர்த்தருடைய நியாயப்பிரமாணமே என்று லூக்காவும் போதித்தார் (லூக். 2:22-24). யாக்கோபு செய்தது போலவே (யாக். 2:10, 11) பவுலும் கூட தேவன் இஸ்ரவேலர்களுக்குக் கொடுத்திருந்த பலவித கட்டளைகளை "நியாயப் பிரமாணம்" என்ற சொற்றொடரிலேயே உள்ளடக்கினார் (ரோமர் 2:20-23; 7:7; 13:8-10). "மோசேயின் நியாயப்பிரமாணம்," "கர்த்தருடைய நியாயப்பிரமாணம்" மற்றும் "நியாயப்பிரமாணம்" ஆகிய எல்லாம் - தேவன் இஸ்ரவேல் இனத்திற்குக் கொடுத்திருந்த பிரமாணமாகிய - ஒரே வகை நியாயப்பிரமாணத்தையே குறிக்கின்றது (உபா. 4:7, 8). இந்த நியாயப்பிரமாணமே புறம்பே ஒதுக்கப்பட்டு அதற்குப் பதிலாக இயேசுவின் பிரமாணம் இடம் பெற்றது.

பெண்ணொருத்தி தனது கணவன் உயிர் வாழும் வரையிலும் அவனுக்குக் கட்டுப்பட்டிருக்கின்றாள் என்பதைச் சுட்டிக்காட்டி, நியாயப்பிரமாணத்தைத் திருமணத்துடன் பவுல் ஒப்பிட்டார். இந்த ஒப்பீட்டில் அவரது முடிவைக் கவனியுங்கள்: "அப்படிப்போல, என் சகோதரரே, நீங்கள் மரித்தோலிருந்து எழுந்த கிறிஸ்து என்னும் வேறொருவருடையவர்களாகி, தேவனுக்கென்று கனி கொடுக்கும்படி, கிறிஸ்துவின் சரீரத்தினாலே நியாயப்பிரமாணத்துக்கு மரித்தவர்களானீர்கள்" (ரோமர் 7:4). இதே கருத்தைப் பவுல் கலா. 2:19லும் வெளிப்படுத்தினார்: "தேவனுக்கென்று பிழைக்கும்படி நான் நியாயப்பிரமாணத்தினாலே நியாயப்பிரமாணத்திற்கு மரித்தேனே."

ரோமர் 7:6 வசனமானது, "இப்பொழுதோ, நாம் பழமையான எழுத்தின்படியல்ல, புதுமையான ஆவியின்படி ஊழியஞ் செய்யத் தக்கதாக, நம்மைக் கட்டியிருந்த நியாயப்பிரமாணத்துக்கு நாம் மரித்தவர்களாகி, அதினின்று விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம்" என்று கூறுகின்றது.

*இயேசுவின்மூலம் நாம் நியாயப்பிரமாணத்திற்கு மரித்தவர்களாகி அதிலிருந்து விடுதலையாக்கப்பட்டு இருக்கின்றோம் என்பது, இனி அது நம் மீது அதிகாரம் உடையதாக இருப்பதில்லை என்றும் மற்றும் அதைக் கடைப்பிடிக்கும் பொறுப்பு நமக்கு இருப்பதில்லை என்றும் அர்த்தப் படுகின்றது.*

*நியாயப்பிரமாணமானது முழுமையாகக் கடைப்பிடிக்கப்பட்டால் அது நீதியைக் கொண்டு வர முடிந்திருக்கும். இருப்பினும், பாவத்தின் காரணத்தினால் அது அச்செயலைச் செய்யவில்லை (கலா. 2:21; 3:21, 22). விசுவாசிப்பவர்களுக்கு, நீதி உண்டாகும்படியாக இயேசுவே நியாயப் பிரமாணத்தின் முடிவாய் இருக்கின்றார் (ரோமர் 10:4). இது, நாம் யாவரும் இயேசு ''முடிவாக'' உள்ள நியாயப்பிரமாணத்தினைக் கடைப்பிடிப் பதினால் அல்ல ஆனால் விசுவாசத்தின் மூலமாக நீதிமான்களாக்கப் படுகிறோம் என்று அர்த்தப்பட வேண்டும்.*

*"முடிவு" என்ற வார்த்தையானது "முடிவு" என்று மட்டுமேயல்லாமல் அர்த்தப்படுகின்ற telos என்பதிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது (மத். 10:22; 24:6; லூக். 1:33), ஆனால் இது "தொன்று தொட்டு வரும் பழக்கம்" (மத். 17:25; ரோமர் 13:7), "நிறைவேற்றம்," "விளைவு" அல்லது "விளையும் பொருள்" (லூக். 22:37; ரோமர் 6:21, 22; யாக். 5:11), மற்றும் "இலக்கு" (1 தீமோ. 1:5) என்றும் அர்த்தப்பட முடியும். ரோமர் 10:4ன் சந்தர்ப்பப் பொருளில், telos என்பது "முடிவு" அல்லது "முடித்தல்" என்ற அதன் மூல அர்த்தத்தைத் தக்க வைத்துக் கொள்ளுகின்றது. வசனங்கள் 1 முதல் 3 வரையிலும், யூத மக்கள் இயேசுவில் உள்ள விசுவாசத்தின் மூலம் நீதியைத் தேடுவதற்குப் பதில் தங்கள் சுயநீதியைத் தேடினார்கள் என்ற உண்மையைப் பவுல் முன் வைத்தார். பவுல் இயேசுவின் பின்பற்றாளராகும் முன்பு அவரும் கூட (பவுலும் கூட) நியாயப்பிரமாணத்தினால் வரும் தமது சுய நீதியையே நாடியிருந்தார்; ஆனால் அவர் இயேசுவைக் கண்டறிந்த பிறகு, நியாயப்பிரமாணத்தின் மூலம் வருகின்ற நீதியை நாடியிருந்ததில்லை (பிலி. 3:9). நியாயப்பிரமாணத்தின் மூலமாக நீதியானது வர முடியும் என்றால், இயேசு மரித்தது தேவை இல்லாததாயிருக்குமே (கலா. 2:21). இதற்கு நேர் மாறாக, இயேசு, நீதி உண்டாகும்படியாக நியாயப் பிரமாணத்தின் முடிவாய் இருக்கின்றார். இயேசுவில் விசுவாசம் கொள்ளுகின்றவர்களுக்கு நியாயப்பிரமாணத்தின் மூலமாக நீதியைத் தேடுதல் என்பது முடிவுக்கு வந்துள்ளது, ஏனென்றால் இயேசு நியாயப்பிரமாணம் நீதியின் வழி என்பதை முடித்து வைத்து விட்டார்.*

*கலா. 3:19ல் பவுல், நியாயப்பிரமாணமானது எவ்வளவு காலம் தொடர வேண்டியதாயிருந்தது என்பதை வெளிப்படுத்தினார்: "அப்படியானால், நியாயப்பிரமாணத்தின் நோக்கமென்ன? வாக்குத்தத்தத்தைப் பெற்ற சந்ததி வருமளவும் அது அக்கிரமங்களினிமித்தமாகக் கூட்டப்பட்டு, தேவதூதரைக் கொண்டு மத்தியஸ்தன் கையிலே கட்டளையிடப்பட்டது.'' இதற்கு முன்னதாக அவர், இயேசுவே அந்தச் சந்ததி என்று விளக்கியிருந்தார் (கலா. 3:16). இயேசு வரும் வரையிலும் மக்களைக் கட்டுப்படுத்தவே நியாயப்பிரமாணம் தரப்பட்டது என்ற உண்மையானது, அவருடைய*

வருகையானது நியாயப்பிரமாணத்திற்கு ஒரு முடிவைக் கொண்டுவந்தது என்று அர்த்தப்படுகின்றது.

இந்தச் சிந்தனையானது ஒரு சில வசனங்களுக்குப் பிறகு தொடரப்படுகின்றது:

> ஆதலால், விசுவாசம் வருகிறதற்கு முன்னே, வெளிப்படப்போகிற விசுவாசத்திற்கு ஏதுவாக நாம் அடைக்கப்பட்டவர்களாய் நியாயப் பிரமாணத்தின்கீழ் காவல் பண்ணப்பட்டிருந்தோம். இவ்விதமாக நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு, நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது. விசுவாசம் வந்தபின்பு, நாம் உபாத்திக்குக் கீழானவர்களல்லவே (கலா. 3:23-25).

நியாயப்பிரமாணமானது விசுவாசத்தினால் வரும் நீதியை அளிக்க முடியாதிருந்தது; அதற்குப் பதிலாக, அது நீதியைத் தடை செய்தது. நியாயப்பிரமாணமானது ஒரு உபாத்தியாக, ஒரு ஆசிரியராக (கிரேக்கம்: *paidagogos*) - நேரடியான அர்த்தத்தில் ஒரு குழந்தைக்காப்பாளராக அல்லது குழந்தையைக் கவனிப்பவராக இருந்தது.

> *Pedagogue* என்பவர் குடும்பத்திலுள்ள குழந்தைகளில் ஒரு குழந்தையைக் கவனித்துக் கொள்வதற்காக செல்வந்தரான கிரேக்கர்கள் அல்லது ரோமர்களால் பணிக்கு அமர்த்தப்பட்ட ஒரு அடிமையாய் இருந்தார். அவர், குழந்தையின் ஆறு வயது முதல் பதினாறு வயது வரையிலும் அவனுடைய பொறுப்பாளராகவும், அவன் எங்கு சென்றாலும் அவனுடைய நடத்தையைக் கண்காணிப்பவரும், மற்றும் பள்ளிக்குக் கூட்டிச் சென்று மற்றும் கூட்டி வருதல் ஆகியவற்றிற்கும் பொறுப்பாளியாய் இருப்பார்.[2]

பவுலினால் ஏற்படுத்தப்பட்ட “குழந்தைக் - காப்பாளர்” என்ற வகையிலான ஒப்பீடானது குழந்தையானது அவரால் (குழந்தைக் காப்பாளரால்) பள்ளி ஆசிரியரிடம் ஒப்படைக்கப்படும் வரை மட்டுமே கட்டுப்பாடு உடையதாயிருந்தது, அதுபோலவே நியாயப்பிரமாணமும் நம்மை இயேசுவிடம் கொண்டுவரும் பொறுப்பாகவே இருந்தது. இயேசுவின் மீது விசுவாசம் கொள்பவர்களுக்கு இரட்சிப்பை அளிக்க அவர் (இயேசு) வந்த பிறகு நியாயப்பிரமாணமானது தனது நோக்கத்தை நிறைவேற்றியிருந்தது. இப்பொழுது நியாயப்பிரமாணம் அளித்திருக்க முடியாத இரட்சிப்பை நமக்கு அளிக்க இயேசு வந்திருக்கும் இவ்வேளையில் நாம் இனியும் நியாயப்பிரமாணமாகிய பொறுப்பாளரின் கீழ் இருப்பதில்லை (கலா. 3:25).

நியாயப்பிரமாணமானது யூதர்களைப் புறஜாதியாரிடமிருந்து பிரித்தது, ஏனென்றால் விருத்தசேதனமற்ற மக்கள் இஸ்ரவேலர்களின் பல விதமான நடைமுறைகளிலிருந்து தடை செய்யப்பட்டிருந்தனர் (யாத். 12:48). விருத்தசேதனமில்லாத புறஜாதியாருடன் தோழமை கொண்டிருப்பது நியாயப்பிரமாணத்திற்கு விரோதமானது என்று யூதர்கள் கருதினர் (அப். 10:28; 11:2, 3; 16:3; 21:28).

நியாயப்பிரமாணத்தை நீக்கிப் போட்டதன் மூலமாக இயேசு இதை மாற்றினார். எபேசியர் 2:14, 15 வசனங்கள் நமக்குப் பின்வருமாறு கூருகின்றன:

> எப்படியெனில், அவரே நம்முடைய சமாதான காரணராகி, இருதிறத்தாரையும் ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து, சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம் பண்ணி,

நியாயப்பிரமாணமானது இஸ்ரவேல் இனத்தாரை மட்டுமே உள்ளடக்கியிருந்தது (உபா. 4:7, 8; யாத். 34:27, 28; 1 இரா. 8:9, 21), அது புறஜாதியாரை உள்ளடக்கவில்லை (சங். 147:19, 20; ரோமர் 2:14). நியாயப்பிரமாணம் தொடரும் வரையிலும் யூதர்களும் புறஜாதியாரும் ஒன்றாக முடியாதிருந்தது. இயேசு தமது மரணத்தில் தம்முடைய மாம்சத்தினால் (கொலோ. 1:22) நியாயப்பிரமாணத்தை நீக்கிப் போட்டார் (எபே. 2:14, 15); அவர் சிலுவையில் நியாயப்பிரமாணத்தை முடித்து வைத்தார்.

இயேசு ‘‘நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து” என்று பவுல் எழுதிய பொழுது அவர், மன்னிக்கப்பட்டிருந்த மீறுதல்களைக் குறிப்பிட்டிருக்கலாம் (கொலோ. 2:13, 14). அதற்கு மறுபுறத்தில், பவுல் இஸ்ரவேலர்களுக்குத் தேவன் கொடுத்திருந்த கட்டளைகளையும், சிலர் கிறிஸ்தவர்களின்மேல் கட்டுப்படுத்த முயற்சித்த மற்ற சில கட்டளைகளையும் குறிப்பிட்டிருக்க முடியும். இந்தச் சிந்தனைக்கான பின்வரும் காரணங்களைக் கவனியுங்கள்:

(1) கொலோ. 2:13ல் பவுல், நமது மீறுதல்கள் (பன்மை) மன்னிக்கப்பட்டன என்று எடுத்துரைத்தார். பிறகு வசனம் 14ல், அவர், “கையெழுத்தானது” (கிரேக்கம்.: *cheirographon*, ஒருமை) - நேரடியான அர்த்தத்தில் “கட்டளைகள்” அடங்கிய கையினால் எழுதப்பட்ட பத்திரம் (கிரேக்கம்: *dogma*) - எடுத்துப்போடப்பட்டதென்பதையும் கூடச் சொன்னார். “கையெழுத்தினால் ஆன பத்திரம்” என்றால் என்ன? பவுல் மீறுதல்களைக் குறிப்பிட்டிருந்தாரென்றால், அவர் ஏன் “அதை” என்பதற்குப் பதிலாக ‘‘அவைகளை’’ என்ற பிரதிப் பெயர்ச் சொல்லை மட்டும் பயன்படுத்தாதிருந்தார்? இங்கு அவர் “அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின் மேல் ஆணியடித்து” என்று எழுதியுள்ளார்.

(2) சகல ஞானமும் அறிவும் மறையப் பெற்றுள்ள இயேசுவின் மேன்மைத்துவத்தைப் பற்றி எழுதுவதே பவுல் கொலோசெயருக்கு எழுதுவதன் முக்கிய ஆய்வாக இருந்தது (கொலோ. 2:3). இயேசு மேன்மையானவராக இருப்பதால் வேறொன்றும் போதிக்கப்படக் கூடாது (கொலோ. 2:4, 8). கொலோசெயில் இருந்த கிறிஸ்தவர்கள் இயேசுவிடமிருந்து வந்திராத கட்டளைகளுக்கு மரித்திருந்தனர், எனவே பவுல் அப்படிப்பட்ட கட்டளைகளுக்கு அவர்கள் ஏன் தங்களைக் கீழ்ப்படுத்தினார்கள் என்று கேட்டார் (GK.: *dogmatizo*, இது “கட்டளைகளுக்குக்

*கீழ்ப்படிதல்'' என்று அர்த்தப்படும் ஒரு வினைச் சொல் ஆகும்; கொலோ. 2:20).*

*(3) இயேசு அவர்களுடைய மீறுதல்களை மன்னித்தது மட்டுமின்றி, அவர்களுக்கெதிராகக் கையெழுத்தால் ஆகியிருந்த கட்டளைகளைக் குலைத்தார். இந்தக் கட்டளைகள் அவர்களுக்கு விரோதமாயிருந்தது, அவர்களை சாபத்தின் கீழ்க் கொண்டு வந்திருந்தது (கலா. 3:10), இதை இயேசு சிலுவையில் நீக்கிப்போட்டார் (கலா. 3:13).*

*(4) எபேசியர் 2:15ல் பவுல், ''சட்டதிட்டங்களாகிய நியாயப் பிரமாணத்தை''* [Gk.: *dogma*] *இயேசு ஒழித்தாரென்று எழுதினார். Dogma என்ற கிரேக்க வார்த்தையை அவர் பயன்படுத்துதலானது எபேசியர் நிருபத்தில் உள்ள நியாயப்பிரமாணத்தைக் கனப்படுத்திக் குறிப்பிடவும் (இது தீர்மானமானதாய் இராதிருப்பினும்) அவர் இச்சொற்றொடரை அதே கட்டளைகளைக் குறிப்பிடவே கொலோசெயர் நிருபத்தில் பயன் படுத்தினார் என்ற உண்மையைச் சுட்டிக்காட்டவும் பயன்படுகின்றது. எபே. 2:1-15 மற்றும் கொலோ. 2:11-16 ஆகியவற்றிற்கிடையில் ஒரு நெருக்கமான இணைவு உள்ளது.*

*(5) இயேசு இந்தக் கட்டளைகளைத் தம்முடைய சிலுவையில் அறைந்து அதிகாரங்களின் மேல் தம்முடைய வெற்றியை வெளியரங்கமாகக் காட்சிப்படுத்தினார் (கொலோ. 2:15). இவ்விதமாகப் பவுல், "ஆகையால் போஜனத்தையும் பானத்தையும் குறித்தாவது, பண்டிகை நாளையும் மாதப் பிறப்பையும் ஓய்வுநாட்களையுங் குறித்தாவது, ஒருவனும் உங்களைக் குற்றப்படுத்தாதிருப்பானாக'' (கொலோ. 2:16) என்று எழுதினார். இவைகளுக்கும் மற்ற கட்டளைகளுக்கும் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுடனே கூட மரித்துள்ளனர் (கொலோ. 2:20).*

*இது உண்மையாயுள்ளதென்றால், ஞானஸ்நானத்தில் நாம் இயேசுவுடன் அடக்கம் செய்யப்பட்டு உயிர்த்தெழுகின்ற பொழுது நாம் ஆவிக்குரிய விருத்தசேதனம் பெற்றோம் என்பதே கொலோ. 2:13, 14ன் அர்த்தமாக உள்ளது. நியாயப்பிரமாணத்தின் கட்டளைகளினால் அல்ல ஆனால், தேவனுடைய கிரியை மீது நாம் கொண்டுள்ள விசுவாசத்தினா லேயே நமது பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. அப்படிப்பட்ட கட்டளைகள் நமக்கு நேரெதிரானவைகளாக இருந்தன; அவைகள் நமக்கு மரணத்தையும் ஒரு சாபத்தையும் மட்டுமே கொண்டு வர முடிந்தது. செயல் விளைவற்ற கட்டளைகளின் இந்த அமைப்பை இயேசு எடுத்து, தம்முடைய சிலுவையில் இதை ஆணியடித்து நீக்கிப் போட்டார்.*

*பவுல் கொரிந்து பட்டணத்திற்குப் பயணம் சென்ற பொழுது, "இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றை யும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்" (1 கொரி. 2:2). கர்த்தருடைய கட்டளைகள் பற்றி அவர் (பவுல்) கொரிந்துவில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு எழுதினார் (1 கொரி. 14:37), ஆனால் அவர்களுக்கு அவர் எழுதிய நிருபத்தில் நியாயப்பிரமாணம் அல்லது உடன்படிக்கையின் கட்டளைகள் எதுவும் உள்ளடக்கப்படவில்லை.*

## எபிரெயருக்கு எழுதிய நிருபத்தில் நியாயப்பிரமாணம்

முந்திய கட்டளையானது புறம்பே தள்ளப்பட்டது, ஏனென்றால் ஒரு நிழல் என்ற வகையில் அது தன் கீழ் இருந்தவர்களுக்குப் பயன் தர முடியாததாக இருந்தது. எபிரெயர் 7:18, 19 வசனங்கள், "முந்தின கட்டளை பெலவீனமுள்ளதும் பயனற்றதுமாயிருந்ததினிமித்தம் மாற்றப்பட்டது. (ஏனெனில் நியாயப்பிரமாணமானது ஏதொன்றையும் பூரணப்படுத்த வில்லை), அதிக நன்மையான நம்பிக்கையை வருவிப்பதோ பூரணப் படுத்துகிறது; அந்த நம்பிக்கையினாலே தேவனிடத்தில் சேருகிறோம்." பாவத்தினால் நாம் முழுமையற்றவர்களாய், பூரணமற்றவர்களாய் இருக்கின்றோம்; ஆனால் இயேசு நமது பாவங்களை நீக்குவதன் மூலம் நமது வாழ்வில் குறைவாய் உள்ளவைகளை வழங்கி நிறைவாக்குகின்றார். நியாயப்பிரமாணமானது அதன் பலிகளுடன், ஆராதிப்பவரைப் பூரணப்படுத்தக் கூடாதிருந்தது (எபி. 9:9; 10:1). இருப்பினும் இயேசுவின் பலியானது முதற்பேறானவர்களின் சபையை (எபி. 12:23), அவர் மூலமாகத் தேவனிடத்தில் வருகின்றவர்களை (எபி. 10:14) எப்பொழுதும் பூரணராக்க முடியும். நியாயப்பிரமாணமானது நம்மைப் பூரணப்படுத்த முடியா திருந்தது, எனவே அது விலக்கிப் போடப்பட்டது (எபி. 7:18, 19).

இந்தக் கிறிஸ்தவ யுகத்தில் இயேசுவின் மூலமாகவே தேவனுடைய செய்தியானது நமக்குத் தரப்பட்டுள்ளது (எபி. 1:1, 2). அவருடைய பின்பற்றாளர்கள் அவர் கட்டளையிட்டுள்ள எல்லாவற்றையும் பின்பற்றும் படி போதிக்கப்பட வேண்டும் (மத். 28:20). அவருடைய கட்டளைகளைப் பெற்று அவற்றைக் கடைப்பிடிக்கின்றவர்களே அவர்மீது அன்புகூருபவர் களாக உள்ளனர் (யோவா. 14:15, 21, 23; 15:10). தேவன் இஸ்ரவேலர் களுக்குக் கொடுத்த கட்டளைகள் கிறிஸ்தவர்களை இனிமேல் கட்டுப் படுத்துவதில்லை.

## முடிவுரை

நியாயப்பிரமாணமானது யூதர்களையும் புறஜாதியாரையும் பிரித்தது. இயேசுவின் மரணமானது பிரிவினைச் சுவரைத் தகர்த்தது, மற்றும் கிறிஸ்தவர்கள், நியாயப்பிரமாணத்தின் கட்டளைகளினுடைய வற்புறுத்துதல்களுக்குக் கிறிஸ்துவுடன் மரித்துள்ளனர்.

கிறிஸ்தவர்களுக்கு இரட்சிப்பானது நியாயப்பிரமாணத்தின் மூலம் வர முடியாது - அது தம்முடைய பரிபூரணமான பலியினால் நியாயப் பிரமாணத்தில் இருந்து நம்மை விடுவித்தவராலேயே வர முடியும். நமது விசுவாசமானது மோசேயின்மீதும் நியாயப்பிரமாணத்தின்மீதும் அல்ல, ஆனால் இயேசுவின்மீதும் அவருடைய போதனையின்மீதும் தான் நிலைத்துள்ளது.

குறிப்புகள்

[1]*The New Testament, A New Easy-to-Read Version* (Grand Rapids, Mich.: Baker Book House, 1978), 11; *Contemporary English Version* (New York: American Bible Society, 1991), 7. [2]James Montgomery Boice and Merrill C. Tenney, eds., *The Expositor's Bible Commentary*, vol. 10, *Romans-Galatians*, gen. ed. Frank E. Gaebelein (Grand Rapids. Mich.: Zondervan Publishing House, 1976), 467.

---

## எபிரெயருக்கு எழுதிய நிருபத்தில் உடன்படிக்கைகள்

இயேசு மத்தியஸ்தப் படுத்தியுள்ள உடன்படிக்கை பற்றி எபிரெயருக்கு எழுதிய நிருபமானது பின்வருவனவற்றைப் போதிக்கின்றது:

1. இயேசு இதன் உத்தரவாதமாக இருக்கின்றார் (7:22).
2. இது ஒரு மேலான உடன்படிக்கையாய் இருக்கின்றது (7:22; 8:6).
3. இயேசு இதன் மத்தியஸ்தராக இருக்கின்றார் (8:6; 9:15; 12:24).
4. இது மேலான வாக்குத்தத்தங்களைக் கொண்டு செயல் படுத்தப்படுகின்றது (8:6).
5. இது இரண்டாவது உடன்படிக்கையாக உள்ளது (8:7; 10:9).
6. இது ஒரு புதிய உடன்படிக்கையாக உள்ளது (8:8, 13; 9:15; 12:24).
7. இது இஸ்ரவேலர்களைத் தேவன் எகிப்திலிருந்து கொண்டு வந்தபோது அவர்களுடன் ஏற்படுத்திய உடன்படிக்கையைப் போன்றதல்ல (8:9).
8. இரத்தம் சிந்துதல் உள்ளிட்ட ஒரு மரணமானது இதை அர்ப்பணிக்கத் தேவையாய் இருந்தது (9:16, 18).
9. இதை ஏற்படுத்தியவர் மரித்த பொழுது இது செல்லத் தக்கதாக அமல் படுத்தப்பட்டது (9:17).
10. இது பாவமன்னிப்புக்கு இரக்கத்தை அருளியது (8:12; 10:17).
11. இந்த உடன்படிக்கையின் இரத்தமானது நம்மைப் பரிசுத்தப் படுத்துகின்றது (10:29; இவற்றையும் காணவும் மத். 26:28; மாற். 14:24; லூக். 22:20; 1 கொரி. 11:25).
12. சீனாய் மலையிலிருந்த வந்ததல்லாத இந்த உடன்படிக்கை யிடத்திற்குக் கிறிஸ்தவர்கள் வருகின்றனர் (12:18-24).
13. இது நித்திய உடன்படிக்கையாக உள்ளது (13:20). ஒருவேளை இது தேவன் தீர்க்கதரிசனமாய்க் கூறியிருந்த நித்திய உடன்படிக்கைக்கு ஒரு குறிப்பாக இருக்கின்றது (எரே. 32:40; எசே. 16:60; 37:26).

எபிரெயருக்கு எழுதிய நிருபமானது மோசே மத்தியஸ்தராய் இருந்த உடன்படிக்கையைப் பற்றி பின்வருவனவற்றை எடுத்துரைக்கின்றது:

1. புதிய, இரண்டாவது உடன்படிக்கையானது அதைக் காட்டிலும்

மேலானதாக உள்ளது *(7:22; 8:6).*

2. இரண்டாவதின் வாக்குத்தத்தங்கள் முதலாவதின் வாக்குத் தத்தங்களை விட மேன்மையானவைகளாக உள்ளன *(8:6).*
3. அது முதலாவது உடன்படிக்கையென்று அழைக்கப்படுகின்றது *(8:7, 13; 9:1, 15, 18; 10:9).*
4. அது புதிய உடன்படிக்கையினால் வழக்கற்றுப் போகச் செய்யப்பட்டது *(8:13).*
5. எபிரெயர் நிருபம் எழுதப்பட்ட பொழுது அது பழையதாகி மறைந்து போகத் தயாராயிருந்தது *(8:13).*
6. அதன் கீழ் செய்யப்பட்ட பாவங்களை இயேசுவின் இரத்தமானது மன்னித்தது *(9:15).*
7. அது மிருகங்களின் இரத்தத்தினால் தொடங்கி வைக்கப்பட்டது *(9:18-21).*
8. புதிய உடன்படிக்கை அமலுக்கு வரும்படியாக அது நீக்கிப் போடப்பட்டது *(10:9).*

இயேசுவினால் ஏற்படுத்தப்பட்ட புதிய, இரண்டாவது மற்றும் மேலான உடன்படிக்கையானது மோசேயினால் ஏற்படுத்தப்பட்ட பழைய, முதலாவது உடன்படிக்கைக்குப் பதிலாக வைக்கப்பட்டது. முதலாவது உடன்படிக்கையானது இன்னமும் அமலில் இருப்பதில்லை. “இரண்டாவதை நிலைநிறுத்துவதற்கு முதலாவதை நீக்கிப் போடுகிறார்” *(எபி. 10:9ஆ).*

பலிகள் மாத்திரமே நீக்கிப் போடப்பட்டன என்று அர்த்தம் தரும் வகையில் சில மொழியாக்கங்கள் எபிரெயர் 10:9ஐ மொழிபெயர்த்துள்ளன: “எனவே தேவன் பலிகளின் முதலாவது அமைப்பை முடித்து வைத்து தம்முடைய புதிய வழியைத் தொடங்குகின்றார்” (Easy to Read Version). “நல்லது, படைப்புகள் மற்றும் பலிகளை ஒழித்து அவைகளுக்குப் பதிலீடு செய்யும்படி இப்படியாயிற்று” (Contemporary English Version).

“முதலாவதானது” எபிரெயர் 8ல் முதலாவது உடன்படிக்கையையும் அத்துடன் இணைந்த ஆராதனை முறைமைகளையும் குறிக்கப் பயன்படுத்தப்படுவதால், ‘‘முதலாவதை’’ பலிகளுக்கு வரையறைப் படுத்துதல் என்பது நியாயப்படுத்தப்படாததாக உள்ளது *(8:7, 13; 9:1, 15, 18).* இயேசு நமக்குக் கொடுத்துள்ளது, தேவன் இஸ்ரவேலர்களுக்குக் கொடுத்திருந்த நியாயப்பிரமாணம் மற்றும் உடன்படிக்கையை விட மிகவும் மேலானது என்பதைக் காண்பிப்பதே எபிரெயர் நிருபத்தின் முழு நோக்கமாக உள்ளது *(1:1, 2; 3:3-6; 7:19, 22; 8:6).*

கிறிஸ்தவர்கள் என்ற வகையில், நாம் பத்துக் கட்டளைகள் கொடுக்கப்பட்ட பொழுது, அக்கினி பற்றியெரிகிறதும், எக்காளமும் முழங்குகிறதுமான சீனாய் மலையினிடத்திற்கு வந்து சேரவில்லை *(யாத். 19:18; எபி. 12:18, 19).* நாம் சீயோன் மலையினிடத்திற்கும், பரம எருசலேமினிடத்திற்கும் மற்றும் புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தரான இயேசுவினிடத்திற்கும் வந்து சேர்ந்துள்ளோம் *(எபி. 12:22-24).*

*எபிரெயர் 12:18-24 வசனப் பகுதியானது இரு உடன்படிக்கைகள் பற்றிப் பவுல் கலாத்தியர் 4:24-26ல் கூறிய ஒப்புவமைக்கு இணையானதாக உள்ளது - ஒன்று அக்கினி பற்றியெறியும் சீனாய் மலையில் இருந்தும் (பத்து கட்டளைகளைப் பற்றிய ஒரு குறிப்பு) மற்றும் கிறிஸ்துவின் புதிய உடன்படிக்கையாகிய மேலான பரம எருசலேமைப் பற்றியதுமாகும். இவ்விரு வசன பகுதிகளுமே, கிறிஸ்தவர்கள் சீனாய் மலையிலிருந்து ஏற்பட்ட உடன்படிக்கையின் பிள்ளைகள் அல்ல, ஆனால் இயேசுவின் மூலமாக வெளிப்படுத்தப்பட்ட விசுவாசத்தின் மூலம் தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கின்றனர் என்று போதிக்கின்றன.*

*பவுல் 2 கொரிந்தியர் 3:6-14ல், கற்பலகைகளில் எழுதப்பட்டது "ஒழிந்து போவதாக" இருந்தது (வ. 7, 11) மற்றும் "நீக்கப்பட்டது" (வ. 13) என்று எழுதினார். சீனாயிலிருந்து பேசப்பட்டவைகளினிடத்திற்குச் செல்வதற்குப் பதிலாக நாம் புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராய் உள்ள (எபி. 12:24) இயேசுவினிடத்தில் வந்து, அவருக்கு நம்மை ஒப்புக் கொடுக்க வேண்டியவர்களாயிருக்கிறோம் (எபே. 5:24). முதலாவது நீக்கப்பட்டு விட்டது; நாம் இயேசு மத்தியஸ்தப்படுத்தியுள்ள இரண்டாவது உடன்படிக்கையின் கீழ் ஊழியம் புரிகின்றோம்.*